# யாழ். பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிருப்தி!

## மக்களின் சந்தேகம் குறித்தும் சுட்டிக்காட்டினார்



யாழ். மாவட்டத்தில் போதைபொருள் வியாபாரம் மற்றும் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்திற்கு திடமான தீர்மானதினை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவை பற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல இரத்நாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே இடம் பெற்ற கலந்துரையாடலின் போது மேற்குறித்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

சூம் காணொளி ஊடாக இன்றைய தினம் புதன்கிழமை நடைபெற்ற இக்கலந்துரையாடலில், போதைப் பொருள் பாவனைக்கு எதிராக யாழ் மாவட்டத்தில் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ள அமைச்சர், சில சந்தர்ப்பங்களில் போதைப் பொருள் வியாபாரிகள் தப்பித்துக் கொள்வதற்கான கால அவகாசத்தினை பொலிஸார் வழங்கியதான சந்தேகம் மக்கள் மத்தியில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று, வற் அதிகரிப்பு உட்பட்ட பொருளாதார நெருக்கடிகள் எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயற்பாடுகள் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதால், அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் காத்திரமான தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.


கடற்றொழிலாளர் விவகாரத்தினை தீர்ப்பதற்கு இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைசார்ந்தோரை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இணைந்த செயற்குழுவின் சந்திப்பு மற்றும் இருநாட்டு அமைச்சர் மட்டத்திலான சந்திப்பு போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 13 புதன்கிழமை 03.01.2024 கதிர் 150




3 ஆம் பக்கத்தில் ...

## அலெக்ஸின் மரணம் மனித ஆட்கொலை! யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளை




வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்த இளைஞரின் மரணம் “மனித ஆட்கொலை” என யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் பொலிஸாரின் சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தார்.

அது தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதவான் 2 ➤

## உடுப்பிட்டி மதுபானசாலைக்கு எதிராக கண்டனப் போராட்டமும் கடையடைப்பும்



யாழ்ப்பாணம், வடமராட்சி, உடுப்பிட்டி பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு எதிராகக் கண்டனப் போராட்டம் இன்று காலை முன்னெடுக்கப்பட்டது. உடுப்பிட்டி சந்தியில் நடைபெற்ற 2 ➤

## வரலாற்றில் முதற்தடவையாக மரக்கறிகளின் விலை உச்சத்தில்

வரலாற்றில் முதற்தடவையாக மரக்கறிகளின் விலை தற்போதை அளவுக்கு உயர்வடைந்துள்ளதாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி நேற்று (02) தெரிவித்தார்.

நேற்றைய தினம் கரட் கிலோ ஒன்றின் விலை 750 ரூபாவாகவும், பீட்ரூட் கிலோ ஒன்றின் விலை 380 ரூபாவாகவும், முட்டைக்கோஸ் கிலோ ஒன்றின் விலை 500 ரூபாவாகவும், பீன்ஸ் கிலோ ஒன்றின் விலை 600 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் பேலியகொட மெனிங் சந்தையில் மரக்கறிகளின் விலை நேற்றைய தினம் மிகவும் அதிகரித்து காணப்பட்டதாக பேலியகொட மெனிங் பொது வர்த்தக சங்கத்தின் தலைவர் எச்.டி.என். சமரதுங்க தெரிவித்தார்.

அதன்படி, ஒரு கிலோ கணக்கில் கரட் ரூ.500, பீன்ஸ் ரூ.600, முட்டைகோஸ் ரூ.400, கத்தரிக்காய் ரூ.500, பச்சை மிளகாய் ரூ.1100, தக்காளி ரூ.650, பெரிய வெங்காயம் ரூ.400 ஆகிய 2 ➤

## வவுனியா வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை

வவுனியா பொது வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு தொற்று ஏற்பட்டு வருகின்றது. அதனடிப்டையில் வவுனியா வைத்தியசாலையில் 39 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும், குறித்த 39 பேரும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு சென்று வந்த நிலையிலேயே டெங்கு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் டெங்கு தொற்று தாக்கம் பெரியளவில் ஏற்படவில்லை.

எனினும், பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழித்து டெங்கு தொற்றில் இருந்து தம்மையும், சமூகத்தையும் காக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். (அ)

## எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டால் பாடசாலை போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கும்

### பாடசாலைகள் போக்குவரத்து சேவைகள் சங்கம் தெரிவிப்பு



பெப்ரவரி மாதத்தில் அரசாங்கம் எரிபொருள் விலையை திருத்தியமைத்தால், பாடசாலை வாகன போக்குவரத்து கட்டணம் உயர்த்தப்படுவது குறித்து தீர்மானிக்கப்படும் என அனைத்திலங்கை மாவட்டங்களுக்கிடையிலான பாடசாலைகள் போக்குவரத்து சேவைகள் சங்கத் தலைவர் கே.ஹரிச்சந்திர பத்மசிறி தெரிவித்துள்ளார்.

மேலும், பாடசாலை போக்குவரத்து கட்டணம் உயர்த்தப்படும் என கூறப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட 2 ➤

## கொழும்பு துறைமுக நகரத்தில் தனியார் மருத்துவமனை!

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு துறைமுக நகரத்தில் மருத்துவமனை ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளததாக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனமான ஆசிரி மருத்துவமனைக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்கான முதிட்லீடுத் தொகை 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் தெரியருகின்றது.

2023 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வற் வரி அதிகரித்துள்ளமையால் 'லெட்' கட்டணமும் அதிகரிக்கலாம்

வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்பிலுள்ள பொதுக் கழிவறைகள் உட்பட நாட்டிலுள்ள அனைத்து பொதுக் கழிவறைகளுக்கும் அறவிடப்படுகின்ற கட்டணத்தை அதிகரிப்பதற்கு சில துப்புரவு பணி ஒப்பந்ததாரர்கள் முயற்சிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, பொது கழிப்பறைக்கு இதுவரை வசூலிக்கப்பட்ட 10 ரூபாய் கட்டணம் 20 ரூபாயாக உயர்த்தப்பட்டு, 20 ரூபாயாக இருந்த கட்டணத்தை 30 ரூபாயாக உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வற் வரியுடன் அதிகரிப்பினால் நீர் கட்டணமும் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் அதனை ஈடுசெய்யவே பொது மலசலகூடங்களுக்கு அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துப்புரவு பணி ஒப்பந்ததாரர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-12)

# பழுதடைந்த உருளைகிழங்கு விதைகளை கிளிநொச்சி காட்டில் புதைக்க நடவடிக்கை

பழுதடைந்த உருளைக்கிழங்கு விதைகளை கிளிநொச்சி வனவளத் திணைக்களத்திற்கு சொந்தமான காட்டுப்பகுதியில் உரிய நடைமுறைகளை பின்பற்றி புதைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - குப்பிளானில் உள்ள களஞ்சிய சாலையில் பழுதடைந்த உருளைகிழங்கு விதைகளை பொதி செய்து வாகனத்தில் ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

பொலித்தீன் பைகளில் அவை பாதுகாப்பாக அகற்றி விவசாய நிலங்கள், நிலத்தடிநீர் மற்றும் குடியிருப்புக்களை பாதிக்காத வகையில் புதைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

விவசாய திணைக்களத்தின் கண்காணிப்பில் மூன்று அடி ஆழத்திற்கு கீழே பாதுகாப்பு முறைமைகளை கையாண்டு சில தினங்களுக்குள் பழுதான உருளைக்கிழங்கு விதைகள் புதைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் பொதுமக்களுக்கோ விவசாயிகளுக்கோ மண்ணுக்கோ நிலத்தடி நீருக்கோ பாதிப்பு ஏற் படாது என துறைசார் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பிலான கலந்துரையாடல் திணைக்கள தலைவர்கள், துறைசார் அதிகாரிகள் விவசாயிகளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறித்த விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்குள்ளாமையினால் பழுதடைந்திருந்தது.

குறித்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் ரத்தாயின!

இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று (02) முதல் மறு அறிவித்தல் வரும் வரை இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் பொறியியலாளர் நரேந்திர டி சில்வா வெளியிட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அவசர தேவைகளுக்காக சம்பந்தப்பட்ட கிளை அல்லது பிரிவின் ஊடாக நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுடன் ஊழியர்கள் விடுமுறையை எடுக்க முடியும் என்றும் குறித்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் விலையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பு இந்த மாதம் (ஜனவரி) மேற்கொள்ளப்படாது எனவும், இந்த மாதம் பாடசாலை விடுமுறை என்பதால் அது பெற்றோருக்கு இழைக்கப்படும் அநீதியாக இருக்கும் எனவும் மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள ஹரிச்சந்திர பத்மசிறி "வெட் மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக அனைத்து பாடசாலை வாகன ஓட்டுனர்களும் சிரமத்தில் உள்ளனர். அடுத்த மாதம் அரசாங்கம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொண்டால் மாத்திரமே பாடசாலை போக்குவரத்து கட்டணம் உயர்த்தப்படுமா இல்லையா என்பதை உறுதியாக கூற முடியும். நாங்களும் மிகுந்த சிரமதத்தின் மத்தியில்தான் போக்குவரத்து சேவையை நடத்தி வருகின்றோம், டயர் விலை அதிகரிப்பு, உதிரிப் பாகங்களின் விலை அதிகரிப்பு, சேவைக் கட்டண அதிகரிப்பு, எரிபொருளும் விலை அதிகரிப்பு ஆகியன நம்மை பெரிதும் பாதித்துள்ளன" என்றார். (ரெத-09)

## வரலாற்றில் முதற்தடவையாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலைகளில் விற்பனை செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும், மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக பல வாடிக்கையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருவதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-10)

## கொழும்பு துறைமுக நகரத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்குகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள்) கட்டளையின் கீழ் இந்த திட்டத்தை அனுமதித்தல் அல்லது ஊக்குவிப்பு வழங்குவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதாக தொடர்புடைய அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரெத-11)

## உடுப்பிட்டி மதுபானசாலைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் உடுப்பிட்டி பகுதியில் கடையடைப்பும் இடம்பெற்றது.

உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீளத் திறக்கப்பட்ட மதுபானசாலையால் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை உடனடியாக அகற்றக் கோரி உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கடைகளைப் பூட்டி கடையடைப்புக்கு உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புக்கள் ஒன்றாகச் சேர்ந்து அழைப்பு விடுத்திருந்தன.

போராட்டத்தின் இறுதியில் பிரதேச செயலகத்துக்குப் பேரணியாகச் சென்று ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டது. அதன் பிரதிகள் பல்வேறு தரப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

## அலெக்ஸின் மரணம் மனித ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

மேற்படி வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இளைஞரின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றுக்குக் கிடைக்கப்பெற்றது. அதில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞரின் உடலில் காணப்பட்டன எனவும், இதனால் உயிரிழப்பு நேர்ந்தது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கு விசாரணைகளில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் முகத் தோற்றளவில் இளைஞரின் உயிரிழப்பு, "மனித ஆட்கொலை" என்று நீதிவான் மரண விசாரணை கட்டளையின்போது குறிப்பிட்டார்.

மேலும் இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்தனர் என்று தெரிவித்த நிலையில், இதுவரையில் நால்வரே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மற்றைய சந்தேகநபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு இந்த வழக்கின் விசாரணைப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் மேற்படி குற்றத்தில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதால் நீதிமன்றக் கட்டளையின் பிரதியைப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறும் மன்று கட்டளையிட்டது.

மேலும், குறித்த வழக்கு விசாரணை ஆவணங்களைச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பாரப்படுத்துமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில் நீதிவான் நீடித்துள்ளார். (அ)

## யாழ். பொலிஸாரின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று, பனை தென்னை வள கூட்டுறவுச்சங்களின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கான கடன் வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் வற் அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்றவற்றால் நாடளாவிய ரீதியில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்த கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
மாலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

## நிந்தவூர் தாழ் நிலப்பகுதியில் வெள்ள நீரை வடிந்தோடச் செய்யும் பணிகள் ஆரம்பம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் பிரதேசத்தில் தாழ் நிலப் பகுதிகள் வெள்ள நீரால் மூழ்கியுள்ளதால் மக்களின் நாளாந்த இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

வழமையாக நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் செல்லும் பிரதான வடிகானினூடாக வடிந்து செல்லும் வெள்ள நீர் கடலில் சேர்வது வழமையான ஒன்றாகும்.

பொது மக்கள் சிலர் வடிகான்களுக்குள் வீட்டுக்கழிவுகள், விலங்குக் கழிவுகள், கண்ணாடி மற்றும் போத்தல் ஓடுகள், திண்மக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகளை இடுவதனால் வடிகான்கள் அடைத்து வெள்ளநீர் வடிந்து செல்லாமையே இவ்வாறு தாழ் நிலங்களில் வெள்ளநீர் நிற்பதற்கான பிரதான காரணமாகும் என்று சுட்டிக்காட்டப்படுகி றது.

நிந்தவூர் பிரதேச மேற்கொண்ட உடனடி நடவடிக்கையின் பயனாக வேலைப் பகுதி மேற்பார்வையாளர் ஏ.எஸ்.நிஸாட் பிரதேச சபை ஊழியர்கள் மூலமாக வடி கான்களை துப்பரவு செய்யும் நடவடிகையினை துரிதப்படுத்தியுள்ளார்.

## தேசிய மட்ட கராத்தே போட்டியில் புத்தளம் மாணவர்ளுக்குத் தங்கம்!



(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

அகில இலங்கை ஷொடோகன் கராத்தே சம்மேளனத்தின் 22 வது வருட நிறைவையொட்டி நடாத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் புத்தளம் மாணவர்கள் இருவர் தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்த தேசிய மட்ட போட்டிகள் கொழும்பு சுகதாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றன.

மேற்படி தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில், வசீ ஷொடோக்கன் கராத்தே டூ சங்கத்தின் புத்தளம் கிளையின் மாணவர்களாகிய ஏ.எம்.அஸாம் 21 வயதுக்குட்பட்ட பிரிவிலும், யூ. தாமிர் 14 மற்றும் 15 வயதுக்குட்பட்ட பிரிவிலும் குமித்தே போட்டிகளில் பங்குபற்றி தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். இம்மாணவர்களுக்கான பயிற்சிகளை புத்தளம் டபிள்யூ .எஸ்.கே.ஏ கராத்தே சங்கத்தின் பிரதான போதனாசிரியரும் பயிற்றுவிப்பாளருமாகிய சிஹான் எம். பெரோஸ் வழங்கியிருந்தார்.

## ஸ்ரீலங்கா இஸ்லாமிக் றிலிப் அமைப்பால் புதுவருட அன்பளிப்புகள் வழங்கப்பட்டன



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஸ்ரீலங்கா இஸ்லாமிக் றிலிப் தன்னார்வு அமைப்பு அம்பாறை மாவட்டத்தின் பதியத்தலாவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெண்கள் அமைப்புகளுக்கு அவர்களின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகளுக்கு புது வருடத்தை முன்னிட்டு அன்பளிப்புகளை வழங்கியுள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிக்கும் செயற்பாட்டில் இப்பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெண்கள் ஆற்றிய சேவையைப் பாராட்டும் முகமாகவே இந்த அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், பதியத்தலாவ உதவி பிரதேச செயலாளர் அப்துல் பாஸித், ஸ்ரீலங்கா இஸ்லாமிக் றிலிப் அமைப்பின் பிரதிநிதிகள், பிரதேச செயலகப் பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



## மிதி வெடி

*எல்லாரும் எப்பிடி இருக்கிறியள்?*

*புது வருசமும் பிறந்துட்டுது இனி கொஞ்ச நாளைக்கு எல்லாரும் ஒரு உசாரோட தான் நிப்பியள்...*

*இப்பிடித்தான் போன வருசமும்... வருசப் பிறப்பைக் கொண்டாடிப் போட்டு, இந்த வருசமாவது வெட்டுறன்... விழுத்துறன் எண்டெல்லாம் உள்ளுக்குள்ள உறுதிமொழி எடுத்துப்போட்டு நிமிருறதுக்குள்ள "இயர் எண்ட் பார்ட்டி" வந்துட்டுது... விடுங்கோ விடுங்கோ... உது வழமை தானே?*

*போன முறை மிதிவெடியில மாட்டிக் கொண்ட "அவருக்கு" மாற்றமாம் தெரியுமே உங்களுக்கு? அண்ணை உன்ர கடுப்பு அந்தாளுக்கு மாற்றம் வந்துட்டுது பாத்தியோ எண்டு ரெண்டு மூண்டு பேர் போஃன் பண்ணிக் கேட்டவை. நான் என்ன சொன்னான் தெரியுமே?*

*தம்பியவை...உது ஒருக்காலும் நடக்காது. அவர் பலே கில்லாடி பாருங்கோ.. மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டி தன்னைக் காத்துக் கொள்ளுறதில மனுசன் பி.எச்.டி முடிச்சிருக்கும் போல... பளைக்கு வந்த மாற்றத்தோட ஆளுக்கு அது அஞ்சாவது... ஒரு காலமும் அசையேல்ல... அதிகாரிகளையே உச்சிற ஒரு அதிகாரி அவர்...*

*சரி உதை விடுங்கோ... இங்கால பெரிய பள்ளிக்கூடத்துக்குள்ள ஏதோ சலசலப்பாம்... என்னெண்டு பாப்பமே? ஆரோ... வெளிநாட்டு ஸ்ரைலில அரைக் காச்சட்டையோட வந்த ஒரு தம்பிய அங்க நிண்ட செக்கியூரிற்றி மறிச்சுப் போட்டுதாம்... அதை வீடியோ எடுத்து ட்ரெண்டிங் ஆக்கியிருக்கினம்... அது அவையின்ர பிரச்சினை... போகேலாதெண்டா போகேலாது தானே? அதில என்ன புடுங்குப்படக் கிடக்கு?*

*ஆனாப் பாருங்கோ உள்ளுக்குள்ள இருக்கிற மெத்தப் படிச்சதுகளே அரைக் காச்சடையோ வந்தவையை விட்டிருக்க வேணும் எண்டு விதண்டாவாதம் பேசினமெல்லே... அதைத் தான் பாத்துக்கொண்டு சும்மா இருக்க முடியேல்ல...*

*நாட்டில படிச்சவையால தான் பிரச்சினை பாருங்கோ... அறப் படிச்ச பல்லி கூழ்ப் பானைக்குள்ள விழுந்த கதை தெரியுந்தானே உங்களுக்கு? அது மாதிரித் தான் உங்க பெரிய பள்ளிக்கூடப் பக்கம் நடக்கிற கூத்துகளும் இருக்குது.... அங்க பெரிய ஆசிரியர்களுக்குள்ள கடும் பிரச்சினை. குத்து வெட்டும், குழி பறிப்பும் படிச்சவைக்குக் கைவந்த கலை தானே? ஆனாச் செய்யுறது தான் செய்யினம் பிடி படாமல் செய்யத் தெரியாமல் நிக்கினம்.*

*அதில ஒருத்தர் சட்டம் படிப்பிச்சாத் தமிழல படிப்பிக்க வேணும் எண்டு சொல்லி படம் பிடிச்சுப் பேஃஸ்புக்கில போட்டுப் பிரபலம் தேட வெளிக்கிட்டு மூஞ்சி உடைபட்டுப் போய் நிக்கிறார். தன்ர பிள்ளை மட்டும் இங்கிலீஸ் மீடியத்தில கொழும்பில சட்டம் படிக்க, எங்கட பிள்ளையள் இங்க குண்டுச் சட்டிக்குள்ள குதிரை ஓட்ட வேணும் எண்டு சொல்லி வாங்கிக் கட்டிப் போட்டார்.*

*மற்றவை ரெண்டு பேர் இருக்கினம். "நாய்க்கு எங்க அடிச்சாலும் பின்னங்காலத் தூக்கிறது போல... இந்த ரெண்டு பேரும் பெரிய பள்ளிக் கூடத்தில என்ன நடந்தாலும், தலைமை ஆசிரியரில தான் பிழை சொல்லுவினம். ஆசிரியர் சங்கத்தின்ர மற்ற மெம்பர் மாருக்குத் தெரியாமல் அறிக்கை விட்டாலும் சரி.... பிள்ளையளே படிப்பிடிக்கிறவை தொல்லை தருகினமா... எங்களிட்ட சொல்லுங்கோ எண்டு நோட்டீஸ் வந்தாலும் சரி தங்கட பாட்டில கதைச்சுக் கதைச்சுத் தன் புண்ணைத் தானே கிளறி மணக்கிற வேலையைச் செய்யினமாம்.*


*தங்கட சங்கத்தின்ர அறிக்கையை எதிர்த்து மாணவர்கள் செய்த போராட்டத்த மனசில வைச்சுக் கொண்டு, மாணவர் ஒன்றியத்துக்கு எதிராக ஆசிரியர்களைத் திசை திருப்ப, மாணவர்கள் விட்டது போல... சில மாணவர்களை வைச்சு நோட்டீஸ் அடிப்பிச்சவையாம்.... அந்தப் பிளா னும் பிசு பிசுத்துப் போக இப்ப காச்சட்டையோட வந்தவைய உள்ள விட்டிருக்க வேணும் எண்டு சொல்லித் திரியினம்.*

*இவை தான் சட்டம் படிச்ச அம்மணி ஒருத்தியை பட்டம் பெறப் போற பிள்ளையளுக்குப் பாடம் நடத்த விடேல்ல எண்டு சங்கத்தின்ர மிச்ச ஆக்களுக்குத் தெரியாமல் ஒண்டு ரெண்டு பேர் சேர்ந்து கதைச்சுப் போட்டு, மாணவர் ஒன்றியத்துக்கு எதிரா அறிக்கை விட்டு மாட்டிக் கொண்டவை. இந்த ரெண்டு பெரிய ஆசிரியர்களும் தான் இப்ப இந்தக் காச்சட்டைப் பிரச்சினையிலும் வாய்க்கு வந்தபடியெல்லாம் கதைக்கினம்.*

*ஆறுமுகத்தான் அண்ணனைப் பற்றி அந்த ஐ(ந்து)கரத்தான் அழகாய் அறிவானாம். நமக்கெதுக்கு வம்பை? உது பெரிய இடத்து விவகாரம் நாளைக்கு என்ர மக்கள், மருமக்கள் படிக்கிற இடத்தில பாஸ் பண்ணி வெளியேற வேணுமே.... இருக்கிற இடம் தெரியாமல் இருந்துட்டுப் போயிட வேணும் பாருங்கோ....*

*-நரமுனி-*

# சூரியனுக்கு மிக அருகில் பூமி இருக்கும் நிகழ்வு



சூரியனை நீள்வட்டப் பாதையில் பூமி சுற்றி வருவதால், குறைந்த விட்டமுடைய வட்டப்பாதையில் பூமி பயணிக்கும்போது பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரம் குறைந்து மிக அருகில் சூரியன் தென்படும். இதனை பெரிஹேலியன் தினம் என அறிவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பெரிஹேலியன் நாள் என்பது வருடாந்திர சுற்றுப் பாதையில் சூரியனுக்கு மிக அருகில் பூமி இருக்கும் தருணத்தைக் குறிக்கிறது.

இந்த அரிய நிகழ்வு இன்று நடைபெறுகிறது. இந்த நிகழ்வின்போது மற்ற நாள்களில் இருக்கும் தூரத்தைக் காட்டிலும் சூரியன் - பூமி இரண்டுக்கும் இடையே 3 மில்லியன் மைல் தொலைவு குறைவாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

பூமி சூரியனை முழுவதும் சுற்றிமுடிக்க ஓராண்டு ஆகும். ஆனால், ஆண்டுதோறும் இதே நாளில் பெரிஹேலியன் நாள் வராது. அதாவது, ஆண்டுதோறும் இதே நாளில் சூரியனுக்கு மிக அருகில் பூமி வராது. மாறாக ஓரிரு வார வித்தியாசங்களில் பெரிஹேலியன் நாள் நிகழக்கூடும் என அறியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். (04)

# ஆப்கானிஸ்தானில் அரை மணி நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம்



ஆப்கானிஸ்தானில் அரை மணி நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். இவை ரிச்டர் அளவில் 4.4 மற்றும் 4.8 எனப் பதிவாகியுள்ளன.

முதல் நிலநடுக்கமானது, பைசாபாத் நகரத்தில் இருந்து 126 கிலோ மீற்றர் தொலைவில் 80 கிலோ மீற்றர் ஆழத்தில், 4.4 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இதைத் தொடர்ந்து, பைசாபாத் நகரத்தில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் 140 கிலோ மீற்றர் ஆழத்தில், 4.8 ரிச்டர் அளவில் இரண்டாவது நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் வீடுகளும் அதிர்ந்ததால் மக்கள் மிரண்டுபோய் வீட்டைவிட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். சேதங்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 இல் ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் உள்ள ஹெராத் மாகாணத்தில் காலை 11 மணி முதல் 12 மணி வரை அடுத்தடுத்து 4 முறை பாரிய அதிர்வுகள் ஏற்பட்டன. இவை ரிச்டர் அலகில் 5.5, 5.9, 6.2, 6.3 என்று பதிவாகின. தொடர்ந்து பல முறை சிறிய அளவிலான நில அதிர்வுகளும் ஏற்பட்டன. இந்த பூகம்பத்தால் ஹெராத் பகுதியில் 20 கிராமங்கள் முழுமையாக நாசமாகின. 10,000 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். 4000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

இதேவேளை, ஜப்பானில் புத்தாண்டுத் தினத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 62 ஆக அதிகரித்துள்ளது. இதனால், அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. (04)

# பிரித்தானியாவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி VR தொழிநுட்ப விளையாட்டில் துஷ்பிரயோகம்!

பிரித்தானியாவைச் சேர்ந்த 16 வயதான சிறுமியொருவர் **Virtual reality** எனப்படும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட விளையாட்டின் மூலம் உள ரீதியாக கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**Metaverse game** எனப்படும் விளையாட்டின் மூலமே குறித்த சிறுமி உடல் ரீதியாக அல்லாமல் உள ரீதியாக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மைக்காலமாக செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் **(AI)** மூலம் உலகின் பல இடங்களில் அசம்பாவிதங்கள் இடம்பெறுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துவருகின்றன. ஒருவருடைய தலை இன்னொருவருடைய உடலில் பொருத்தி காணொளிகளாகப் பகிர்வதில் ஆரம்பித்து, பல்வேறு தகாத நடவடிக்கைகள் குறித்து கவனம் கொள்வதற்கு வலிறுத்தப்படுகிறது.

**Metaverse game** எனப்படுவது செயற்கை நுண்அறிவு விளையாட்டாகும், இதில் பயனர்கள் தத்தமது கதாபாத்திரங்களை **(Avatar)** தமக்கு ஏற்றவகையில் வடிவமைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாறான விளையாட்டுக்களில் ஈடுபடும்போது இனந்தெரியாத நபர்களால் பயனர்களின் கதாபாத்திரங்களை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# தென்னாபிரிக்காவை சுருட்டியது இந்தியா!



இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் தொடரின் இறுதியுமான டெஸ்ட் போட்டி கேப்டவுனில் இன்று ஆரம்பமாகியது.

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் செஞ்சுரியனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் அந்த அணி தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி எந்தவித போராட்ட குணத்தையும் வெளிப்படுத்தாமல் தென்னாபிரிக்க அணியிடம் சரணடைந்தது. முதல் இன்னிங்ஸில் கே.எல். ராகுல் அடித்த சதம், இரண்டாவது இன்னிங்ஸில் விராட் கோலி சேர்த்த 76 ஓட்டங்கள் ஆகியவற்றை தவிர்த்து இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையால் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க முடியாமல் போனது.

இன்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது. ஆயினும் இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர்கள் வீசிய பந்துகளை எதிர்கொள்ளத் திணறிய அந்த அணி, 23.2 ஓவர்களிலேயே 55 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்திய அணியின் மொகமட் சிராஜ் 6 விக்கெட்டுகளையும், பும்ரா, முகேஷ் குமார் இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

# சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளத் தயார்! - இஸ்ரேல் அறிவித்தது



சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்து வருவதாக சர்வதேச நீதி மன்றத்தில் தென்னாபிரிக்கா வழக்குத் தொடர்ந்திருந்தது.

சர்வதேசச் சட்டத்தை இஸ்ரேல் மீறுவதாக குற்றம் சாட்டிய தென்னாபிரிக்கா, இஸ்ரேல் காஸா மீதான தாக்குதல்களை நிறுத்த ஆணை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுத்தது.

ஆயினும், ஒக்டோபர் 7 இல் ஹமாஸ் நடத்திய தாக்குதல்களை அரசியல் மற்றும் சட்டத்தைக் கொண்டு மறைக்கும் முயற்சி இது, என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் செய்தித்தொடர்பாளர் கடந்த செவ்வாய்க்கிழமை பதிலளித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் இந்த அபத்தமான குற்றச்சாட்டை சர்வதேச நீதிமன்றத்தில் எதிர்க்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

'காஸாவின் மருத்துவமனைகள், பாடசாலைகள், மசூதிகளுக்கு ஒளிந்திருக்கும் ஹமாஸ் அமைப்பு மட்டுமே இந்தப் போருக்கு முழுப் பொறுப்பு' எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரும் ஜனவரி 11 மற்றும் 12 இல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. காஸாவில் இதுவரை 22,000த்திற்கும் அதிகமான மக்களை இஸ்ரேல் கொன்றுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

# வரலாற்று விழுதுகள் அமைப்பின் வருட இறுதி ஒன்று கூடலும் அதிகஷ்ட பிரதேச மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கலும்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

"வரலாற்று விழுதுகள்"அமைப்பால் வறுமையை ஒழித்து கற்றலுக்கு உதவும் திட்டத்தின் அடிப்படையில், அதன் தலைவர் தவலிங்கம் ஐங்கரன் தலைமையில் மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அதி கஷ்டப்பிரதேச பாடசாலையான 39ஆம் கிராமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருவருள், ஆசிரியர்கள், மாணவர்கள், அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# 9 ஏ.சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்




(ஹஸ்பர்)

கிண்ணியா வலய கல்வி அலுவலகத்தினால் ஒன்பது ஏ. சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்றன.

வலய கல்வி பணிப்பாளர் ஏ. நசூகர் கான் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணாமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் கலந்து கொண்டார், இதேவேளை கிண்ணியா வலய பிரதிக் கல்வி பணிப்பாளர்களான, செய்யது அஹமட், ஏ.எல்.சிராஜ், எம்.சி.எம்.நஸார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி, முள்ளிப்பொத்தானை கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

தமது திறமைகளை நிரூபித்துக் காட்டிய மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கல்வியலாளர்களும் வெற்றிக் கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

அத்துடன் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.




# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராமகிருஷ்ண மிஷன் உணவு வழங்கியது



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தபுரத்தில் கன மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் ஒரு தொகுதி சமைத்து உணவை நேற்று செவ்வாய்க் கிழமை பகல் வழங்கியது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னின்று அந்த சமைத்த உணவுகளை மக்களுக்கு வழங்கி வைத்தார்.

சுமார் 150 குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது.

# டீ.எஸ்.சேனநாயக சமுத்திர பகுதிக்கு மாவட்ட அரச அதிபர் ஆய்வுப்பயணம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வான் கதவுகள் திறக்கப்பட்ட பிரதான நீர்த்தேக்கங்களுள் ஒன்றான இங்கினியாகல டீ.எஸ்.சேனநாயக சமுத்திரத்தின் நிலைப்பாட்டை ஆராய்வதற்காக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்க மற்றும் நீர்ப்பாசன திணைக்கள உயர் அதிகாரிகள் உட்பட்ட குழுவினர் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சமுத்திரத்தின் சுற்றயல் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் அன்றாட செயற்பாடுகள் பற்றியும் அவர்கள் ஆராய்ந்தனர்.

# மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!



(நூருல் ஹுதா உமர்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பமாவதையிட்டு, கல்முனை கல்வி வலய சாய்ந்த மருது கமு-கமு-மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜெ.கே.எம். அர்சத் காரியப்பர் அவர்களின் ஆலோசனை வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச்சுகாதார பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டு கள பணியாளர்கள் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை ஆரம்பமாவதையிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலை வளாகங்களையும் சுத்தப்படுத்தும் தேசிய டெங்கு ஒழிப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நிஜித் சுமனசேன ஏற்கனவே ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

தேசிய டெங்கு ஒழிப்பு திட்டத்தின் அறிவுறுத்தலுக்கமைய, உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு திட்டம் துரிதகதியில் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த அவர், தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், தற்போது மழையும் கொஞ்சம் கொஞ்சமாக குறைகின்றது. இந்நிலையில், நுளம்புப் பெருக்கத்துக்கு சாதகமான சூழல் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் உயிரிழந்தவருக்கு கொரோனாவா?

வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் மரணமடைந்த நிலையில், அவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தில் அவரின் உடல் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அனுராதபுரம், பதவியா பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதான நபர் சிறுநீரக நோய் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி நீமோனியா காய்ச்சலாக மாறி நேற்று இரவு அவர் மரணமடைந்தார். அவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்ட நிலையில், அவருடைய உடல் மாதிரிகள் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

# ஹெரோயினுடன் ஐந்து பேர் கைது

பதுளை, போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரிகளால் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

36, 42, 57, 63 மற்றும் 67 வயதுடையவர்களே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனவும், இவர்கள் பதுளை நெலும்கம மற்றும் பஹல்கம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை நகரைச் சுழவுள்ள பகுதிகளில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனையில் இக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டு, கைது இடம்பெற்றது.

பதுளை அந்தெனிய பாலம் மற்றும் கலன் சந்திக்கு அருகில் இரண்டு சந்தேகநபர்களும், பதுலுபிட்டி, கைலாகொட மற்றும் நெலும் கமடி ஆகிய இடங்களில் மூன்று சந்தேநபர்களும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த மற்றும் பிரதேச குற்றப் புலனாய்வுப் பொறுப்பு அதிகாரி பி.ஓ.பி.பிரியந்த சர்மிந்த ஆகியோரின் பணிப்புரையின் பேரில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இந்தச் சோதனையை மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பதுளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ)






## கல்மெடியாவ குள நீரேந்து பகுதியில் கசிவு கடற்படை உதவியுடன் சரிசெய்யப்பட்டது




(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள கல்மெடியாவ குளத்தின் நீரேந்து பகுதியில் கசிவு ஏற்பட்டதையடுத்து கடற் படையினரின் உதவியால் அது சரிசெய்யப்பட்டது.

நீர்ப்பாசன திணைக்களம் ஊடாக குறித்த குளப்பகுதியின் நீர் கசிவு தொடர்பில் கடற்படையினரின் உதவியுடன் இன்று காலை அது சரி செய்யப்பட்டது.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டு ஆறுகளின் கிளைகளும் திறக்கப்பட்டதால் இக்குளத்தின் நீர் மட்டமும் அதிகரித்ததன் விளைவாக இக்கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கல்மெடியாவ குளத்தின் சுமார் 200 மீற்றர் தூரம் கொண்ட துருசி நீரினுள் கடற்படையினர் சென்று நீர்க் கசிவு தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

குளத்தின் நீரேந்து பகுதி பூட்டப்பட்டு, நீருக்கடியில் அதன் தொழில்நுட்ப ரீதியான விளைவுகளை பாதக கண்டுகொண்டதையடுத்து, கசிவு ஏற்படாதவாறு சரி செய்யப்பட்டு குளத்து நீர் மீண்டும் திறக்கப்பட்டது.

இந்த முயற்சியில் நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.கௌரிதாசன், தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள், கடற்படையினர் உள்ளிட்ட பலர் இணைந்திருந்தனர்.

## இங்கிரிய பகுதியில் போதை வியாபாரம் 46 வயதுடைய பெண் பொலிசாரால் கைது!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நோய்வாய்ப்பட்ட, சிறப்புத் தேவையுடைய தனது 11 வயது மகனை ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளின் பின்புறம் அமர வைத்து போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 46 வயதுடைய பெண்ணொருவரை இங்கிரிய பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட்ட போது 2 கிராம் 250 மில்லி கிராம் ஹெரோயினும், 1,50,000 ரூபா பணமும், 8 கையடக்க தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரான பாதுக்க பிரதேசத்தைச் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுக்க பிரதேசத்திலிருந்து போதைப் பொருளை இங்கிரிய மற்றும் அதன் சுற்றுவட்ட பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக விற்பனை செய்து வருவதாக விசாரணைகளின் போது தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.01.2024 இல் வெளியிடப்பெற்றது.